பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆண்டு வைகாசி மீ 11 உ. சனிக்கிழமை [25—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 172

# உலர் உணவை செயலகமே கொள்வனவு செய்து வழங்கும்

## முல்லைத்தீவுப் பகுதி அகதிகளின் போராட்ட முன்னறிவிப்பால் பலன்

யாழ்ப்பாணம், மே 25

முல்லைத்தீவுப் பகுதி மக்களின் சாத்வீகப் போராட்ட முன்னறிவித்தல் பலன் அளித்துள்ளது. அதன் விளைவாக நடந்த பேச்சுவார்த்தையின்போது, திங்கட்கிழமை தொடக்கம் உலர் உணவு வழங்குவதற்கு ஏற்பாடாகி உள்ளது

அதுவும் முதல் மூன்று வாரங்களுக்கு முல்லைத்தீவுச் செயலகம், உள்ளூரில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களைத் தானே கொள்வனவு செய்து ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்க இணங்கி உள்ளது.

முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்தும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கு கடந்த பதினொரு மாதங்களாக [4 வாரங்கள் தவிர்ந்து] எவ்வித நிவாரணம் வழங்கப்படாமையும்-

பல முறைகளும் பலனளிக்கத் தவறியதால், இறுதிக் கட்டமாகத் தாம் சாத்வீகப் போராட்டம் நடத்தப் போவதாக பாதிக்கப்பட்ட மக்கள் முன் அறிவித்தல் கொடுத்திருந்தமையும் - தெரிந்தவையே.

சாத்வீகப் போராட்டம் நடத்துவதற்கு இம்மாதம் 16 ஆம் திகதி முதல் ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவுச் செயலக அதிகாரிகள் செயற்பட்டனர். கடந்த வியாழக்கிழமை மாலை முல்லைத்தீவு அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் குழுவுக்கும், பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர்ப் பகுதியில் நேற்று வீடுகள் எரிப்பு?

யாழ்ப்பாணம், மே 25

காரைநகர்ப் பகுதியில் நேற்றுக்காலை நீண்ட நேரம் புகைமண்டலம் எழுந்ததைக் காணமுடிந்தது.

பொன்னாலைப் பகுதியில் இருந்து பார்த்தபொழுது, காரைநகரின் நடுப்பகுதியில் தீ சுவாலை விட்டு எரிந்ததையும் காணமுடிந்தது.

அப்பகுதியிலுள்ள வீடுகள் சிலவற்றைப் படையினர் எரித்திருக்கலாம் என நம்பப்பட்டது.

இதே சமயம், காரைநகர்ப் பகுதியில் நேற்று இடையிடையே குண்டுச் சத்தங்களும் கேட்டன; துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. [ஒ-15]

## அலம்பிலில் நேற்று விமானத் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம், மே 25

மணலாறுப் பகுதியில் உள்ள அலம்பில், நாயாறு, கொக்குளாய் ஆகிய இடங்களில் நேற்றுக்காலை 6 மணி அளவில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதலில் 4 வீடுகளும், ஆஸ்பத்திரி ஒன்றும், ஒரு பாடசாலையும், எரித்த நிலையங்களும் சேதமடைந்தன.

பொதுமகன் ஒருவர் காயம் அடைந்தார்.

இதே சமயம்—

நேற்றுக்காலை முந்திரிகைக் குளம் இராணுவத்தினர் கொக்குளாய் 15 ஆம் கட்டைை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு தென்னமரவாடி முகாமில் இருந்து கொக்குளாய், முகத்துவாரம், நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. [உ-3]

## மன்னார் அரச ஊழியருக்கு போக்குவரத்து ஏற்பாடு!

யாழ்ப்பாணம், மே 25

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் சகல அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் கடமைக்குத் திரும்ப போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட ஊழியர்கள் மீளவேலைக்குத் திரும்புவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய நேற்று யாழ்-இந்துக் கல்லூரியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

மன்னார் அரச அதிபர் திரு. எஸ். செபநாயகம் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

மன்னார் அரச ஊழியர்கள் சங்குப்பிட்டியில் இருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யமுனா நதி தீரத்தில் ராஜீவின் பூதவுடல் தகனம்!

புதுடில்லி, மே 25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இறுதிக் கிரியைகள் நேற்று புதுடில்லி யமுனா நதி தீரத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் முன்னிலையில் இடம்பெற்றன.

முன்னதாக தீன்மூர்த்தி பவனில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ராஜீவின் பூதவுடல் நேற்று நண்பகல் 1 30 மணிக்கு அங்கிருந்து சுமார் 11 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள யமுனா நதி தீரத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது-

யமுனா நதி தீரத்தில் இடம்பெற்ற இறுதி நிகழ்ச்சிகளில் சோவியத் ரஷ்யாவின் உப ஜனாதிபதி, பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ், ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா, பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத், பங்களாதேஷ் பிரதமர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



முல்லைத்தீவு முன்மாதிரியை மற்றைய இடத்திலும் கைக்கொள்ளுவினமோ... ?

## கப்பலிலிருந்து படையினர் நெடுந்தீவை நோக்கி ஷெல்!

நெடுந்தீவு, மே 25

நெடுந்தீவுக் கடற் பகுதியில் நங்கூரமிடம்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலில் இருந்து நெடுந்தீவை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த புதன்கிழமை ஏவப்பட்ட ஷெல்கள் நெடுந்தீவு மத்தி. ஆறாம், ஏழாம், வட்டாரங்களில் விழுந்து வெடித்தன. இதனால் சிலர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

அனேகமான ஷெல்கள் கடலில் விழுந்து வெடித்ததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. எனினும் மக்கள் பீதியுடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

இதே சமயம் கடந்த திங்கட்கிழமை நடந்த தாக்குதலில் நெடுந்தீவு மத்தி, 9 ஆம் வட்டாரத்தில் பிரேமேந்திரன் நந்தினி [17 வயது], நெடுந்தீவு மேற்கில் சித்திரம் [50 வயது] ஆகியோரும் நெடுந்தீவு கிழக்கில் மற்றொருவரும் காயமடைந்தனர் [ஒ-111-15]

## குண்டை வெடிக்க வைத்த பெண்ணின் படம் பிரசுரம்!

சென்னை, மே 25

ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமான குண்டை வெடிக்க வைத்த பெண்ணின் புகைப்படத்தை சென்னையில் இருந்து வெளிவரும் "இந்து" பத்திரிகை வெளியிட்டது.

அந்தப் படத்தில் அப்பெண் மலர் மாலையுடன் காட்சியளிக்கிறார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

## தமிழகத்தில் 2,200 பேர் கைது

சென்னை, மே 25

ராஜீவ் கொலையுண்டதை அடுத்து தமிழகத்தில் சுமார் 2 ஆயிரத்து 200 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

மாநில தலைமைச் செயலாளர் ரி வி. அந்தோனி இத்தகவலை நேற்று வெளியிட்டார்

தமிழகத்தில் இடம்பெற்ற வன்செயல்களின் விவரத்தையும் அவர் வெளியிட்டார்.

★ 8 பேர் மோதல்களில் இறந்தனர்.

★ 2 பேர் தீக்குளித்து உயிர் துறந்தனர் இன்னும் 2 பேர் தீக்குளித்ததினால் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

★ 22 பஸ்கள் முற்றாக எரிக்கப்பட்டன. 100 பஸ்கள் பலத்த சேதமடைந்தன. — என்றார் அவர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழ தமிழரை திருப்பி அனுப்ப ஜெயலலிதாவும் கோரிக்கை!

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்து இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் இலங்கைக்கு [illegible] திருப்பி அனுப்ப [illegible]

பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

"இது எனது வேண்டுகோள் அல்ல, கோரிக்கையாகும்"— என்றும் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

இதேபோன்ற வேண்டுகோளை தமிழகமாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாதி பயிலுனர்க்கான வெற்றிடம்

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை விக்கின் பியர்ஸ் தாதியர் கல்லூரிக்கு பயிலுனர்க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இரண்டு தடவைக்கு மேற்படாது G C E [O/L] சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் ஆகியவற்றில் 2 இல் திறமைச் சித்தி [C] பெற்றிருப்பவர்கள்.

ஆனி மாதம் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

வயது: 18 - 22 இற்கும் உட்பட்டவர்கள்

விண்ணப்பப் படிவங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் ரூபா 25/- ற்குப் பெற்றுக் கொள்ளவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Principal,
School of Nursing,
Green Memorial Hospital,
Manipay.

[இ-0017]

---

யாழ். மறைவட்ட வெகுசன தொடர்பு ஆணைக்குழு நடத்தும்

## வானொலி நாடக கை எழுத்துப் பிரதிப் போட்டி

கிறிஸ்தவ விழுமியங்களை வெளிப்படுத்தக் கூடிய கருக்களை மையமாகக் கொண்ட வானொலி நாடக கையெழுத்துப் பிரதிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு நாடகமும் 30 நிமிடங்களுக்கு ஒலிபரப்பக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. பிரசுரமாகியோ, ஒலிபரப்பப்பட்டோ, வேறு நாடகத் தழுவலாகவோ இருத்தல் கூடாது.
3. புல்ஸ்காப் தாள்களின் ஒரு பக்கத்தில் எழுதியதாகவும், சொந்த பேர் விலாசங்களுடன், தலைவர், வெகுசனதொடர்பு ஆணைக்குழு, சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.
4. போட்டியில் நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்காக அனுப்பப்படும் பிரதிகள் எதுவும் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

போட்டியின் இறுதித் திகதி 30 - 6 - 91 இல் தெரிவு செய்யப்படும் 3 பிரதிக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.


"தொடர்புச் சாதனங்களுக்கான எழுத்துப் பட்டறை"

ஒன்று ஆனி மாத இறுதியில் நடைபெறவிருப்பதால், அதற்கான விண்ணப்பங்களை பங்குத் தந்தையின் சிபார்சுடன் அனுப்பிவைக்கவும்.

[சி/5100]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### முத்துக்குமாரு மகேந்திரன்

ஜெனனம்: 18 - 10 - 1964
மரணம்: 17 - 05 - 1989

திதி: 25 — 05 — 91

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

நீர்வேலி தெற்கு, நீர்வேலி [16902]

---

## சிமெந்து ஊழியருக்கு கொடுப்பனவு

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு பண்டிகை, விசேட முற்பண கொடுப்பனவுகள் இன்று [சனிக்கிழமை] நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் காலை 8 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணிவரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கணக்காளர் பரீட்சை

இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு 2 தரம் 2க்கு ஆட்சேர்ப்பதற்காக யாவருக்கும் உரிய திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர் வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படும் என்று திறைசேரி அறிவித்துள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி ஜூலை முதலாம் திகதியாகும் இது தொடர்பான ஏனைய விவரங்கள் ஏப்ரல் 26 ஆம் திகதி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-ன]

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் தமிழீழ வள ஆய்வுக் கருத்தரங்குத் தொடரில் இன்றைய நிகழ்வுகளாக மூன்று தலைப்புக்களில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறவுள்ளன.

வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய தமிழீழ வரலாறு, இரேஷ்ட விரிவுரையாளர் என். சத்தியசீலன் எழுதிய ஐரோப்பியர் கால வரலாறு, வணிக முகாமைத்துவத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் எழுதிய சமூகப் பின்னணி ஆகியனவே இன்று இடம்பெறவுள்ள ஆய்வுக் கட்டுரைகள் ஆகும். [ஒ]

## கேரதீவில் மரணமானவர்

தென்மராட்சி, மே 25

கேரதீவு துறையில் மயங்கி விழுந்து மரணமானவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி ஆழ்வாப்பிள்ளை [வயது 61] என்பவரே இறந்தவர் ஆவார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இவரது சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டி, எடுத்துச் சென்றனர். [ஒ-117]

---

## A/L 91

வினா - விடை

புதிய பகுதிகள்

இன்று ஆரம்பம்

சனிக்கிழமை
காலை 7.30 மணி

PHY.
— சத்தியசீலன்
CHE.
— செல்வா
ZOO.
— ஈஸ்வரதாசன்
BOT.
— பாலா
PURE / APP.
— கலைநேசன்

விவரங்களுக்கு:

PERSONAL
NEW SCIENCE
CENTRE
Elilakam Front Lane,
JAFFNA.

[இ-0018]

---

## யாழ் திருமறைக் கலா மன்றம்

நடத்தும்

இரண்டு நாள் கலை அரங்குகள்

தூய ஆவியின் திருவிழாவையொட்டி

இன்று 25-05-1991 மாலை 6-30 மணிக்கு

### இசை மாலை

நாளை 26 05 1991 மாலை 6-30 மணிக்கு

### கிராமியக் கலை அரங்கம்

இடம்: 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[சி-5098]

---

## சிறு கைத்தொழில் பயிற்சி நிலையம்

கிறீன் மெமோறியல் வைத்தியசாலை மானிப்பாயிலுள்ள இந்த நிலையத்தில் 6 மாத பயிற்சி கொடுக்கப்பட இருக்கிறது. இதற்கு G. C. E [O/L] படித்த பெண்கள், விதவைகள் பயிற்சிக்காக ஆனி 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்ப படிவங்களை மேற்கூறிய இடத்தில் பெற்று விண்ணப்பிக்கவும். ரூபா பத்து படிவங்களுக்குக் கட்டணம்.

Secretary,
V. T. C.
Green Memorial Hospital,
Manipay.

[இ-0016]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

## அமைய எழுதுவினைஞர்கள்

மேற்படி பதவிக்கு க. பொ. த [சா / த] இல் [தமிழ், ஆங்கில, கணிதத்தில்] திறமையுடன் சித்தி. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு சுருக்கெழுத்தில் சான்றிதழ், கணக்கியலில் அனுபவம் இரண்டு வருடத்துக்கு குறையாத கற்றோர் நடைமுறை அனுபவம். வயது 20 — 45 ஆகியவை கொண்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 29-05-1991

நேர்முகப் பரீட்சை 31 - 05 - 1991 மு. ப 9 00 மணிக்கு இவ் அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியானவர்களின் பெயர் பட்டியல் எமது கற்றோர் விளம்பரப் பலகையில் வெளியிடப்படும்.

தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

78, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
24-05-1991

கௌரவ செயலாளர்:
ச. சிவானந்தராசா

[சி/0051]

---

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி குமாரசாமி

திருமதி நவமணி குமாரசாமி [இச்சி] [செட்டிச் சோலை, அளவெட்டி] 17-05-91 இல் காலமாகிவிட்டார். அன்னார் திரு. கா. குமாரசாமி [இ. போ. ச முன்னாள் காப்பாளர்] அவர்களின் அன்பு மனைவியும், திருமதி க. வசந்தாதேவி, திரு. கு. ஞானகிருஷ்ணன் [ஜேர்மனி], செல்வன் கு. மதிபாலன் [சுவிஸ்சலாந்து], திருமதி சாந்தாதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி கு. சற்குணாதேவி, செல்வன் கு. உதயராசன் [சுவிஸ்சலாந்து] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ச. கணநாதன் [நாதன் இரும்புத் தொழிலகம், தெல்லிப்பளை], திரு. இ. ஸ்ரீஸ்கந்தராசா [பரிசோதகர், தொலைத் தொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்], திருமதி துளசி ஞானகிருஷ்ணன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் கடந்த 20-05-91 [திங்கள்] அன்று அளவெட்டி வடக்கு கேணியடி மயானத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்றன. ஈமக்கிரியை பற்றிய விவரங்களை முன்கூட்டியே அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றேன். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
கா. குமாரசாமி [கணவன்]

[16896]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 28—05—1991 பி. ப. 3-00 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலியில் நடைபெறும். கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்கு கொள்ளும்படி அழைக்கின்றோம். புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
22-05-1991.

ச சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.
[சி/5094]

## முதியோர் இல்லத்தில் இசை நிகழ்ச்சி

எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 4 00 மணிக்கு கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

நல்லூர் ஒய்வூதியர் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. [இ]

## பண்ணை போக்குவரத்து

கடல் பெருக்கால் மரக்குற்றிகள் அள்ளுண்டுபோய் துண்டிக்கப்பட்ட பண்ணை தாம் போதிமீண்டும் தற்காலிகமாக திருத்தப்பட்டு கடந்த 20 ஆம் திகதி முதல் பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. [இ-125]

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

**Full Time Technical Educational Institute Offering Following Facilities**

- ★ FULLY EQUIPPED LABORATORIES
- ★ HOSTEL FACILITIES FOR MALE & FEMALE STUDENTS
- ★ LIBRARY
- ★ SPORTS, GAMES & CULTURAL ACTIVITIES

**பின்வரும் தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் JULY 1991 இல் ஆரம்பமாகின்றன**

### 1. Technician Diploma Courses
(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

[i] Electronics & Communication
[ii] Mechanical Engineering
[iii] Electrical Engineering
[iv] Civil Engineering [2 Years]

கல்வித் தகைமை:
G. C E (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 3 வருடங்கள்

### 2. Diploma Courses
(ஆங்கில மூலம்)

[i] Draughtsmanship [Civil]
[ii] Computer Programming & Data Processing
[BASIC, COBOL & dBASE III+]
Practical on IBM - PC, AT & MAT 386 Industrial Controller.

கல்வித் தகைமை
G C E [O/L] கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: One year

[iii] Advanced Diploma in Computing
(ஆங்கில மூலம்)
Syllabus includes British Computer Society [B. C. S] Part I and Australian Computer Society A. C. S Examination.

கல்வித் தகைமை:
G C. E. [O/L] 5 subjects including Maths English & G C E A/L] one subject

Duration: One Year

### 3. Engineering Course
(6 Semesters)

Full time preparing students for E. C E Part I, [London] Exam & I E S L Part I Exam]

Qualification:
G C. E (A/L) Maths with 3 or 4 Passes in two sittings

### 4. Tech. Certificate Course
(ஆங்கில மூலம்)

[i] Radio & T. V. Servicing
[ii] Automobile Practice

கல்வித் தகைமை:
G C E. (O/L) with Maths & Science

காலம்: One Year

### 5. Craft Certificate Courses
(தமிழ் மூலம்)

[i] ஒட்டுனர் பயிற்சி [Welding Practice]

கல்வித் தகைமை:
G. C E [O/L] படித்திருத்தல் வேண்டும்.

காலம்: ஒரு வருடம்

முக்கிய குறிப்பு:

நிறுவன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 10-06-1991**

SELECTION AFTER INTERVIEW

- பணிப்பாளர்.

[சி-5078]

## செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய
## வருடாந்த திருவிழா

வைகாசி 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[16747] -பங்கு மக்கள்.

## பதவி வெற்றிடம்

எமது நிலையம் நடத்தும் பாலர் பாடசாலையில் பொறுப்பாசிரியை பதவி வெற்றிடமாகவுள்ளது. பாலர் பாடசாலை ஆசிரியைப் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 03-06-1991 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

செயலாளர்,
இளைஞர் சங்கம் - மனோன்மணி சனசமூக நிலையம்,
நந்தாவில் அம்மன் கோவிலடி
கொக்குவில்.

[16897]

## தொழிற் பயிற்சிகள்

கீழ்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் 16 வயதுக்கும், 23 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களிடமிருந்து 30-06 91 ஆம் திகதிக்கு முன் கோரப்படுகின்றன.

| பயிற்சிகள் | பயிற்சிக் காலம் | பயிற்சிக்கட்டணம் |
|---|---|---|
| விவசாயம் | 1 வருடம் | இலவசம் |
| வெல்டிங் | 4 மாதங்கள் | மாதம் ரூபா 400 |

மேற்கூறிய இரண்டும் வாசஸ்தலப் பயிற்சிகள் உணவும், தங்குமிட வசதியும் இலவசம்.

திருப்திகரமாக பயிற்சிகள் முடிந்து வெளியேறும் பொழுது சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவமின்றி இடையாக முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

சென்ற வருடம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் தங்கள் பயிற்சிகளை முடிக்காதவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்,
வை. எம். சி. ஏ.,
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்.

[சி 5091]

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

**A/L 91** மாணவர்களுக்கான $2\frac{1}{2}$ மாத பிரத்தியேக

### துரித மீட்டல் வகுப்புகள்

[நீண்ட கால அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை]

**ஆரம்பம்: 25 - 05 - 1991**
காலை 9 00 மணி

- ★ பொருளியல் — திரு. லோகநாதன்
- ★ கணக்கியல் — திரு. மரியதாஸ்
- ★ வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
- ★ அளவையியல் — திரு. யுகபாலசிங்கம்
- ★ தமிழ்/
- ★ இந்துநாகரிகம் — பிரபல ஆசிரியர்
- ★ அரசியல் — திரு. சீலன்
- ★ புவியியல் — திரு. சண்
- ★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்
- ★ அச்சடித்த வினா-விடைப் பயிற்சிகள்.

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஓர் அரிய வாய்ப்பு:

விவரங்களுக்கு: நேரில்

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101 / 10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[இ-0003]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மெஷின்விற்பனைக்கு

புதிதாக இறுத்தி அமைக்கப்பட்ட 4F என்ஜின் (சிவியர்) நீர் இறைக்கும் மெஷின் பெரிய செவிறிக்பம்பு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மா. இராசலிங்கம், தனலட்சுமி வாசம், நாவற்காடு, அச்சுவேலி, [16901]

### விற்பனைக்கு

விளக்கெரிக்கவும், மருத்துவ தேவைக்கும் சுத்தமான வேப்பெண்ணெய். சிறந்த இருமிநாசினியுங்கூட. அரைப்போத்தல் ஒன்று ரூபா 45/- போத்தலுடன், மில்க்வைற். [இ-5095]

### தேவை

புதிய, பழைய மிருதங்க கொட்டுகள் தேவைப்படுகின்றன. வைத்திருப்பவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: கோவிந்தப்பிள்ளை, சாயிராம் மிருதங்கத்தொழில் வகுப்பு நிலையம், 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [16745]

யாழ்நகர் 560, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையத்தில் கடமையாற்ற ஒரு பெண் தாதி தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; டாக்டர் வே. யோகநாதன் 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். காலை 9 முதல், 12 மணி வரை. [4094]

### தவறிவிட்டது

638621193 V இலக்கமுடைய அடையாள அட்டை 22-04-91இல் பாரத் படப்பிடிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக பாரத் ஸ்ருடியோ, 82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்குமபடி கேட்டுக்கொள்கின்றேன். [16891]

அன்னம்மா பஞ்சலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை (348352474X) 17-5-1991 இல் சுன்னாகம் இலங்கை வங்கிக்கும், சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் [16890]

### தொழில் நுட்பக் கல்வி

ரேடியோ, ரிவி, டெக் சேர்விஷிங் எலக்ரிகல் வயறிங் Diploma Technician Certificate மாலை நேர வகுப்புகள் ஜூன் முதலாம் திகதி ஆரம்பம். யூனைற்றட் என்ஜினியரிங் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், 277/271 கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். [16895]

### அதிபர்கள் சேவை

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி கிரகித்தல், பொது அறிவு, கல்விக் கொள்கை உள்ளடக்கியது. அன்ரன் வெளியீடு: எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [இ-4932]

### PERSONAL CLASSES [கணிதம்]

G. C. E (O/L) 90, 91, மற்றும், ஆண்டுகள் 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சித்திக்கு உத்தரவாதம். விவரங்களுக்கு சந்தையா பரராஜசேகரன், 8D, Flechers Lane, Chundikuli. [16842]

### மணமகன் தேவை

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமுள்ள முறையே 26, 29, 33, 37 வயதுள்ள அரசாங்க உத்தியோகப் பெண்களுக்கும், குற்றமற்ற 26, 27 வயதுள்ள ஆசிரியைகளுக்கும் மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [16898]

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் மாற்றுச் சம்பந்தத்தை விரும்பும் அல்லது விரும்பாத மணமக்கள் பலர் இருக்கிறார்கள். சைவ போசன மணமக்களும், கிறிஸ்தவ மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [16899]

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து செவ்வாய்க் குற்றமுள்ள 38 வயது B Sc ஆசிரியருக்கும், B Sc சிவில் என்ஜினியருக்கும் பிரபல வர்த்தகருக்கும், 32 வயதான அரசாங்க உத்தியோகத்தருக்கும், செவ்வாய்க் குற்றமற்ற 28 வயது B Sc. சிவில் என்ஜினியருக்கும், 30 வயது B Sc சிவில் என்ஜினியருக் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். [16900]

### வகுப்புகள்

Cake Icing, Sugar Craft General Cookery புதிய பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன: உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Road, (off Kachcheri Nallur Road) Nallur, Jaffna [சி/5090]

### ஆங்கில வகுப்புகள்

ஆங்கில ஆசிரியர் T. செல்லப்பா B. A (London) மீண்டும் வகுப்புகள் 25/4 B M C ஒழுங்கை மணிக்கூட்டு வீதியில் ஆரம்பித்திருக்கிறார். Spoken English G. C. E. (O/L). + ஆண்டு 10 General English 4 Months Course சேரவிரும்புபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும் முன்பு சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். [16889]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப்பட்டவர்களுக்கான ஆரம்ப அறிவிலிருந்து நடத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 10-00 மாலை 2-00 மணி வரை நடைபெறும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [16572]

## லங்கா சிமெந்து ஊழியருக்கு நிவாரணம்

காங்கேசன்துறை, மே 24 பாதிக்கப்பட்டுள்ள லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி ஊழியர்களுக்கான நிவாரண உ. கார்ட் மாற்றப்பட்டு இ கார்ட் வழங்கப்பட உள்ளது.

இதற்கான அனுமதியை வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு எ. நடராசா கிராமசேவையாளர்களுக்கு வழங்கியுள்ளார். [இ-68]

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 1989/90 ஆம் கல்வி ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டுக்கான விரிவுரைகள் 1991 ஆம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதனை இத்தால் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு அறியத் தருகின்றேன். முன்பு திட்டமிடப்பட்டவாறு விரிவுரைகள் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட மாட்டா.

பதிவாளர்
[இ/5099]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23-8-1909

உதிர்வு: 28-5-1988

திதி: 25-5-1991

### அமரர் கந்தையா செல்வநாயகம்

(முன்னாள் பட்டினசபைத் தலைவரும், அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும்)

எங்கள் ஆசை அன்புத் தந்தையே! அப்பா நீங்கள் பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு அகலாது: உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மாணிபம்பதி"
மானிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 2-9-1916



உதிர்வு: 26-4-1991

### அமரர் சூசை மிக்கேல்

மிக்கேல் எனப் பெயர் சூடி
வாஞ்சையுடன் புவிதனில் எம்முடன்
நீர் இருந்தீர்.
புவி மலர் மண்ணில் வாடி, மிக்கேல் நீர்
விண்ணில் பிரிந்தாலும் வல்லபரன்
கரத்தில் மலர்ந்து இணைய
வேண்டுகிறோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக, இராமநாதபுரம் பத்தாம் பத்திநாதர் ஆலயத்தில் 26-5-1991 ஞாயிறு மாலை 4-00 மணிக்கு இரங்கல் திருப்பலி நடைபெறும்.

28-5-1991 செவ்வாய் மாலை 5 00 மணிக்கு பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி நடைபெறும்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

இல: 638,
இராமநாதபுரம்,
இளவாலை.

[16885]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### இராஜதுரை ராஜேந்திரபோஸ்

[ராஜன்]

(யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவன்)

அன்னையின் மடியில்: 03-12-1969 அரக்கர் அழிப்பில்: 25-05-1987

அன்பினால் எல்லோரையும் ஆட்கொண்ட செல்வமகன் ராஜனே! இளந்தளிர்போல் வளர்ந்த உன்னை மூவாறு வயதினிலே இழந்துவிட்டோமே வானத்தில் வட்டமிட்ட அந்த தும்பியினம் குண்டு மழை பொழிந்ததால், உம் உயிரும் போனதம்மா மாணவனாய் வட்டமிட்டுச் சிறகடிக்கும் உம் பவனி வரும் பால்வடியும் முகத்தினை இனி எப்போது காண்போம்? எங்களை எல்லாம் ஆறாத் துயரத்தில் தவிக்கவிட்டுச் சென்று நான்காண்டு காலம் சென்று விட்டதுவே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் வருந்தும்;
அப்பா, அம்மா, சுபாஸ் அண்ணா,
கண்ணா (ஜேர்மனி), தங்கை, தம்பி,
உறவினர்கள், நண்பர்கள்.

சரோஜா தங்க மாளிகை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[4080]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சொந்தத்தில் தேவை

பயிர்க் காப்புறுதியைப் பழ மரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டிய தேவை குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. வாழை, மா, பலா, தோடை, எலுமிச்சை ஆகிய பழ மரங்களையும் பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டும் என்று கடந்த வாரம் யாழ் செயலகத்தில் நடைபெற்ற விவசாய அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது.

இப்போது நடைமுறையில் உள்ள பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் நெற்பயிரை மட்டுமே காப்புறுதி செய்ய முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்த மட்டில், நெல்லை மட்டும் பிரதான பயிராக, விளை பொருளாகக் கருத முடியாது. உப உணவு, பழமரங்கள், தெங்கு-பனை ஆகியனவும் முக்கிய பயிர்ச் செய்கைகளாக விளங்குகின்றன. உப உணவு வகைகள் தோட்டப் பயிர்களாகவும், பழ மரங்கள் மற்றும் தெங்கு என்பன வீட்டுப் பயிர்களாகவும் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் குடியிருப்புக் காணிகளில் மா, வாழை, பலா, தோடை, எலுமிச்சை என்பன தாராளமாக வளர்க்கப்படுகின்றன. ஆகக் குறைந்தது நாலு மா மரங்களும், பத்து வாழைகளும், இரண்டு எலுமிச்சை தோடைகளும், பத்துத் தென்னங் கன்றுகளும் இல்லாத வீடுகள் யாழ்ப்பாணத்தில் மிகக் குறைவு. இரண்டு பரப்பு வளவில் ஒரு புதிய வீடு கட்டினாலும், ஒரு பரப்பில் ஒரு குடிசை போட்டாலும் அவற்றைச் சுற்றி மா, தென்னை, வாழை, பலா என்று நட்டு விடுவார்கள்.

எனவே எங்கள் பிரதேசச் சூழ்நிலையைப் பொறுத்த வரையில், முக்கனி மரங்களும் மற்றும் தென்னை, தோடை, எலுமிச்சை போன்றவையும் முக்கிய பயிர்களாகிவிடுகின்றன.

மாந்தோப்புகள், பலாத் தோப்புகள் குறைவாக இருந்தாலும் அவை குடாநாட்டு மக்களின் முக்கிய பயிர்கள். வாழை பெரும் பயிராகச் செய்கை பண்ணப்படுவது.

வாழைத் தோட்டங்கள் அடிக்கடி சேதமடைவதால் மக்கள், விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைவதுண்டு. காற்றுக் கடுமையாக வீசும் காலங்களிலும், மழை காலங்களிலும் வாழைப் பயிர் சேதமுறுகிறது. அதனால் விவசாயி நஷ்டமடைகின்றான்.

மா, பலா ஆகியன அடிக்கடி இல்லாவிட்டாலும் பூச்சிகளாலும், ஏனைய நோய்களாலும் தாக்கப்படுவது வழக்கமாகி வருகிறது. தென்னை, எலுமிச்சை, தோடை ஆகியனவும் இப்பாதிப்புகளிலிருந்து தப்புவதில்லை.

எனவே விவசாயின், மக்களின் நஷ்டத்தை ஈடுசெய்வதற்குப் பழ மரங்களையும் காப்புறுதி செய்வது அவசியமாகிறது. இது விடயத்தில் கொழும்பு அரசையோ அதன் முகவர்களையோ நம்பியிராமல், காத்திருக்காமல் எமக்கென்று ஒரு காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது குறித்துப் போதிய அக்கறையும், கரிசனையும் காட்டப்படவேண்டும்.

நாம் எங்கள் காலில் நிற்பதற்கு இது போன்ற புதிய செயற்பாடுகள் மிகவும் பிரதானம். படிப்படியாக, ஒவ்வொன்றாக அவை எமக்கெனச் சொந்தத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

---

யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும்

# பிறப்பு அத்தாட்சி பத்திரத்தை ஏற்க கொழும்பில் தயக்கம்

கொழும்பு, மே 25

யாழ். பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஏற்பதற்குத் தயங்குவதால் வட பகுதி மக்கள் பாஸ்போர்ட் பெறுவதில் பெரும் தாமத நிலை உருவாகி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் பெறப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் பாஸ்போர்ட் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கச் செல்பவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மாளிகாவத்தையில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் பெற்று வாருங்கள் என்று குடிவரவு குடியகல்வு திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றார்களாம்.

இதனை அடுத்து மாளிகாவத்தையில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு வட பகுதி மக்கள் கியூவில் நிற்கும் நிலை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. [இ-100]

## ராஜீவின் கட் அவுட்: ஒருவர் பலி

கிருஷ்ணகிரியில் ராஜீவ் காந்தியின் 'கட் அவுட்' ஒன்றை நிறுவும் பணியில் காங்கிரஸ் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்தக் கட் அவுட் சரிந்து விழுந்தது என்றும் அதில் சிக்கி ஒருவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் இச் சம்பவம் இடம் பெற்றது.

## வீடியோ பரிசீலனையில்

சென்னை, மே 25

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி கடைசியாகக் கலந்து கொண்ட நிகழ்ச்சியின் வீடியோப்படம் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகளின் தீவிர பரிசீலனையில் இருப்பதாக நெதர்லாந்து வானொலி அறிவித்தது.

## போதனாசிரியருக்கான நேர்முகப் பரீட்சை பூர்த்தி

யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க சிரேஷ்ட போதனாசிரியர்கள் மற்றும் போதனாசிரியர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நேற்றுடன் முடிவடைந்தது.

இதற்கென 121 பேர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் 80 போதனாசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சுமார் ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ள மேற்படி 30 போதனாசிரியர்களும் விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ள பயிற்சிச் செயலமர்வில் பங்கு கொண்டு விசேஷ பயிற்சி பெறுவர். [இ-5]

## இன்ரறக் உதவி

யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்ரறக்ட் கழக மாணவிகள் சுழிபுரம் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவு முகமாக உலர் உணவு வகைகள், உடுபுடவைகள் மற்றும் ரூ 7 ஆயிரம் பணம் ஆகியவற்றை அராலி வடக்கு சிற்றூரவையினரிடம் ஒப்படைத்தனர். [ஆ]

## அவசர கால சட்டம் நீடிப்பு

கொழும்பு, மே 25

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் 75 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் கிடைத்தன.

சு. க., ம. ஐ. மு., ஐ. சோ. க. எம்பிக்கள் எதிராக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சுயேச்சை எம்பிக்கள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை [இ-எ]

## இ. தொ. கா. ஆதரவு தருமாம்

கொழும்பு, மே 25

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு முன்வைக்கும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை வென்றெடுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என்று அதன் பொதுச் செயலாளரும் துணை அமைச்சருமான திரு எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்திருக்கிறார். [இ-எ]

## 'சாளரம்' வெளிவரும்

யாழ்ப்பாணம், மே 25

இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் விதத்தில் 'சாளரம்' என்ற புதிய மாத இதழ் வெளிவரவுள்ளது.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தினமான ஜூன் முதலாம் திகதி ''சாளரம்'' வெளியிட்டு வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## அடுத்த கட்ட வாக்களிப்பை விரைவில் நடத்த பரிசீலனை

புதுடில்லி, மே 25

ராஜீவ் காந்தியின் மரணம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்திய பொதுத் தேர்தலின் 2ஆம், 3ஆம் கட்ட வாக்களிப்பை முன் கூட்டியே நடத்துவது பற்றிய கோரிக்கையை தேர்தல் ஆணைக்குழு பரிசீலனை செய்து வருகிறது.

இம் மாதம் 23ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இவ் வாக்களிப்பு, புதிய நிலைமை காரணமாக எதிர் வரும் ஜூன் மாதம் 12ஆம், 15ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. டி. என். சேஷன் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

ஆனால் ஒத்திவைக்கப்பட்ட வாக்களிப்பை முன் கூட்டியே நடத்தும் படி பல தேசிய அரசியல் கட்சிகள் பிரதம தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளன.

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 என்று அறிவிப்பு

சென்னை, மே 25

சென்னை - ஸ்ரீ பெரும்புதூர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்தது.

அவர்களில் 7 பேர் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் அந்த 'மர்மப் பெண்'ணின் சடலம் தவிர ஏனையோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — அந்த பெண்ணின் சடலம் காஞ்சிபுரம் மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. மத்திய புலனாய்வுத் துறையினர் அச் சடலத்தை பார்வையிட்டனர்.

குனியும் போது வெடிக்கக் கூடியதாக அந்தப் பெண்ணின் முதுகுப் புறத்தில் வெடிகுண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம், மே 25

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கல்லூரி அதிபர்களால் கொத்தணி அதிபர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

இடம் பெயர்ந்த மாணவர்கள் விவரங்களையும் வேறாக விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அடுத்த வாரமளவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ-3]

## தபாலகம் மூலம் ஓய்வூதியம் வழங்கக் கோரிக்கை

நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகளை நெடுந்தீவு தபாலகம் மூலம் வழங்குமாறு நெடுந்தீவு ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது இருக்கின்ற கிராமிய வங்கி ஊடாகவே ஓய்வூதியம் வழங்கப்படுவதாகவும், கடந்த பல மாதங்களாக ஓய்வூதியப்பணம் முழுமையாகத் தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும், சில சமயங்களில் சங்கக்கடைகளில் பொருள்களை வாங்குமாறு கூறிப் பின் அதற்குரிய தொகைகளைக் கழித்துக் கொண்டு மீதிப்பணம் வழங்கப்படுவதாகவும் ஓய்வூதியர் சங்கம் கூறுகிறது. [இ-11]

## ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், மே 25

சமயப் பெரியார் ஆத்ம ஜோதி நா. முத்தையாவின் 74 ஆவது ஜெயந்தி தினம் எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்

## மாம்பழ உற்பத்தி அதிகரிக்க சீரான பராமரிப்பு அவசியம்

மாமரங்களை தகுந்த முறையில் பராமரித்து வந்தால் வருடா வருடம் நல்ல பலனைப் பெறலாம். இதில் தவறுவோமானால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர், சந்தைப்படுத்துவோர் அனைவருமே பாதிக்கப்படுவார்கள், எமது தமிழீழ தேசிய பொருளாதாரமும் பாழாகி விடும்.

மாம்பழ அறுவடையின் போது, காய்கள் நன்கு முற்றியதும், அவற்றுக்கு சேதம் ஏற்படாதவாறு அவற்றைப் பிடுங்கவேண்டும். பிடுங்கும் போது காம்பில் உள்ள பால் காய்களில் ஒட்டுகின்றன.

இதனைத் தவிர்க்க அறுவடை செய்ததும், நகச் சூடான கொதி நீரில் தொற்று நீக்கியாக சிறிதளவு சுண்ணாம்பு அல்லது குளோரின் [பிளீச்சிங் பவுடர் 1 கலன் தண்ணீருக்கு ½ தே: கரண்டி] தூளைக் கரைத்து சிறிது நேரம் [5 நிமிடம்] ஊறவைத்து கழுவுதல் நன்று.

மூசிழ் அழுகுதல் நோயையும், ஏனைய பூஞ்சண நோயையும் கட்டுப்படுத்த குறிப்பிட்ட சில நாட்களுக்கு பழத்தை பாதுகாக்க [...] அல்லது தயோபெண்டசோல் [T.B.Z.] பாவிக்கலாம்.

நன்கு முற்றிய மாங்காய்கள் அனைத்தையும் ஒரே சீராக பழுக்க வைப்பதற்கு புகையூட்டல் தகுந்த வழி முறையாகும். பழுக்காத பிஞ்சு காய்களை உப்பிட்டு சாடிகளில் இட்டு ஊறுகாயாக பாவிக்கலாம்.

முற்றாத காய்களை புகையூட்டி சந்தைப்படுத்தும் போது அவை சில சமயம் அழுகி விடுகின்றன. சில பழுக்காமலே சுருங்கி காய்ந்து விடுகின்றன. இத்தகைய அழிவுகளைத் தடுத்து, எமது தமிழீழ பிரதேச வளத்தை மேம்படுத்துவோம்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்திரசேகர் பதவி விலக எதிரணி கோரிக்கை!

ராஜீவ் காந்திக்கு போதிய பாதுகாப்பு வழங்கத் தவறிய தற்கு பொறுப்பேற்று, பிரதமர் பதவியை சந்திரசேகர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தேசிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் சந்திரசேகரின் சமாஜவாதி ஜனதா கட்சி இவ் வேண்டுகோளை நிராகரித்துவிட்டது.

மக்களுடன் சாதாரணமாகப் பழக வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் ராஜீவ் காந்தி தமக்கு வழங்கிய பாதுகாப்பை புறக்கணித்தார் என்று சமாஜவாதி ஜனதாதள் பேச்சாளர் சத்திய பிரகாஷ் மாளவியா தெரிவித்தார். [உ-எ]

# அடுத்த கட்ட வாக்களிப்பு ஜூன் 12, 15 இல் நடக்கும்

புதுடில்லி, மே 25

முன்னர் அறிவிக்கப்பட்டபடி ஒத்திவைக்கப்பட்ட புதிய திகதிகளில் - இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் இரண்டாம் மூன்றாம் கட்ட வாக்களிப்பு இடம்பெறும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் டி.என். சேஷன் நேற்று தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட திகதிகளுக்கு முன்பதாக வாக்களிப்பை நடத்த வேண்டும் என்று விடுக்கப்பட்ட வேண்டுகோளை அவர் நேற்று நிராகரித்து விட்டார்.

[முன்னர் வந்த செய்தி 5ம் பக்கத்தில்] [உ-எ]

## யாழ். பல்கலை. மாணவருக்கு

# தெற்கில் நிரந்தர அனுமதி வழங்க முடியாது!

## மானிய ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று தெற்கிலுள்ள இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அங்குள்ள பல்கலைக்கழகங்களில் தற்காலிக அனுமதி மட்டுமே வழங்க முடியும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த மாணவர்களுக்கு தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் நிரந்தர அனுமதி வழங்க முடியாது என்று ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்துக்கு அறிவித்துள்ளது.

இத்தகைய மாணவருக்கு அங்கு தற்காலிகமாக கல்வி கற்கவசதியளித்தாலும், அவர்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகவே கணிக்கப்படுவர். அவர்களுக்குரிய பரீட்சை மற்றும் பட்டமளிப்பு போன்றவற்றை யாழ். பல்கலைக்கழகமே நடத்த வேண்டும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. [உ-3]

# சோனியாவின் தெரிவு பற்றி அதிருப்தி

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவராக சோனியா காந்தி முதலில் தெரிவு செய்யப்பட்டது குறித்து இந்தியப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை அதிருப்தி வெளியிட்டுள்ளன. [ஒ-எ]

# நினைவு கூட்டம்

இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீர மரணமடைந்த போராளி அப்பனின் 2 ஆவது நினைவுக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு கோண்டாவில் நடைபெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். [உ-3]

# இந்திய - பாக். உறவுநிலை பாதிக்குமாம்!

ராஜீவ் காந்தியின் மறைவு இந்திய — பாகிஸ்தான் உறவை நிச்சயம் பாதிக்கவே செய்யும்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ராஜீவின் மரணச்சடங்கில் கலந்து கொள்ள பாகிஸ்தான் பிரதமர் புதுடில்லி சென்றிருந்தார். [ஒ-எ]

# மறுப்பு

யாழ்ப்பாணம், மே 25

சர்வோதய அமைப்பு யாழ் மாவட்டத்துக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்களை எடுத்து வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. [தி-8]

## யமுனா...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேகம் காலிதா ஸியா, அமெரிக்க உப ஜனாதிபதி டொன் குவேல், மெ நீஷியஸ் பிரதமர் ஜகன்நாத், ஜப்பானின் முன்னாள் பிரதமர் டொஷிகி டோ, நேபாள பிரதமர் பட்டாராய், ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர், பிலிப்பீன்ஸின் உதவிப் பிரதமர், நெதர்லாந்து அமைச்சர் ஒருவர், பொதுநல நாடுகள் அமைப்பின் செயலாளர் ஆகியோரும்—

ஸ்ரீலங்கா பிரதமர் டி.பி. விஜேதுங்க உபசபாநாயகர் காமினி பொன்சேகா, இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் ஆகியோரும் மற்றும் பல தலைவர்களும் பங்குபற்றினர்.

ராஜீவின் சிதைக்கு அவரது ஒரே புதல்வன் ராகுல் காந்தி தீமூட்டினார். [உ-எ]

## மன்னார்.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடத்தல் தீவு வரை தனியார் வாகனத்திலும்—

விடத்தல்தீவில் இருந்து மன்னார் வரை—மன்னார் இணைப்பதிகாரியின் அனுமதியுடன்—படகிலும் செல்வதற்கு வசதி செய்து கொடுப்பது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. [உ-3]

## தமிழகத்தில்.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதற்கிடையில்—

ராஜீவின் கொலையைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநிலத்தின் கரையோரப் பகுதியில் 30 இடங்களைப் பொலிஸார் முற்றுகையிட்டனர் என்றும்—

சுமார் 50 சந்தேக நபர்கள் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் [illegible] [உ-எ]

# பொதுமக்கள் மீது தாக்கு

யாழ்ப்பாணம், மே 25

மன்னார் மாவட்டம் நானாட்டான் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினர் பொதுமக்களை தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் புதன், வியாழக்கிழமைகள் இடம்பெற்றன.

நேற்று நண்பகல் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஒல்லி மடுவைச் சேர்ந்த ஆரோக்கியம், அந்தோனிப்பிள்ளை என்பவர்களும் மற்றுமொருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

நானாட்டான் இராணுவத்தினர் நேற்றுக் காலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சூரியகட்டைக்காட்டைச் சேர்ந்த அருள் சோதி [27 வயது] என்பவர் காயமடைந்தார். [உ-3]

# மன்னார் அகதிகளுக்குரிய உணவு பொருள்கள் தேக்கம்

யாழ்ப்பாணம், மே 25

மன்னார் நகரில் இருந்து குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல படையினர் தடை விதித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள் கப்பல் மூலமாகக் கொண்டுவரப்பட்டு நகரப்பகுதியிலேயே இறக்கப்படுகின்றது.

இதனால் இடம்பெயர்ந்து மடுப்பகுதி கிராமங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த மக்கள் பெரும்பாலும் நானாட்டான் நகரை அண்டிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

அதனால் சம்பந்தப்பட்டவர்களுக்குரிய உலர் உணவுப் பொருள்களை நகரப் பகுதியிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கட்டாயமும் உள்ளது.

இந்த நிலையில் கப்பலில் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் பழுதடைந்து நாசமாகி வருகின்றன என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

அதேசமயம், உணவுப் பொருள்களை வெளியே எடுத்துச்செல்ல படையினர் தடைவிதித்துள்ளதால், அப்பாவி மக்கள் பலர் பட்டினியால் வாடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-8]

## உலர் உணவை செயலகமே...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் போது பின்வரும் ஏற்பாடுகளைச் செய்ய இணக்கம் காணப்பட்டது.

★ இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வாராந்த நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள்.

★ எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து வாராந்த நிவாரணம் வழங்கப்படும்.

★ முதல் மூன்று வாரங்களுக்கும் உள்ளூரில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை அரசாங்க செயலகம் கொள்வனவு செய்து ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கும். அவை வாராந்த நிவாரணமாக வழங்கப்படும்.

★ நான்காவது வாரத்திலிருந்து கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களைத் தருவித்து அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே வழங்குதல்.

அரச அதிபருக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் பேச்சுவார்த்தை முடிவடைந்த உடனேயே வாராந்த உணவை திங்கள் முதல் வழங்க வேண்டிய உத்தரவுகள் கிராம சேவகர்களுக்கும், ப.நோ.கூ. சங்கங்களுக்கும் நேரில் அழைக்கப்பட்டு அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மக்கள் பிரதிநிதிகள் அரசாங்க அதிபரின் உத்தரவாதங்களை ஏற்று மறியல் போராட்டத்தை நடத்தவில்லை என்று தெரிவித்தனர். எனினும் ஊரடங்குச் சட்டம், கப்பல் வரவில்லை, சண்டை நடைபெறுகிறது போன்ற காரணங்களை வைத்து உணவு விநியோகம் தடைப்படுமாயின் நேரடிப் போராட்டத்தில் முன்னறிவித்தலின்றி ஈடுபட வேண்டி ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர். [அ]

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை

[சமாதான நீதவான்]

கல்லூரிவீதி, கொக்குவிலைச் சேர்ந்த திரு சி பொ. வேலாயுதபிள்ளை 23-5-1991 [வியாழக்கிழமை] வவுனியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், சிறீரதி, சிறீகுமாரன், சூரியகுமாரன், சிறீகௌரி, சிறீபாலன், சிறீவாணி, சிறீலலிதா, தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு குணரத்தினம், டாக்டர் ரேணுகாநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுருத்தனின் பேரனும், திருமதி ஐ. சின்னத்தங்கச்சி, காலஞ்சென்றவர்களான திரு. கார்த்திப்பிள்ளை, திருமதி க. சிவகாமிப்பிள்ளை, திருமதி க சின்னம்மா, திரு நாராயணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானம்மா, டாக்டர் ஏகாம்பரம், அன்னரத்தினம், திரு. பொன்னுத்துரை திரு. பொன்னம்பலம், பாக்கியரத்தினம், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பவளம்மா, டாக்டர் தம்பிஐயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

கல்லூரி வீதி,
கொக்குவில்.

வே சூரியகுமாரன்

[16750]

## திருமதி சாரதாதேவி நடராசா

கரும்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொக்குவில் பொற்பதி வீதியில் வாழ்ந்து வருமாகிய இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி சாரதாதேவி நடராசா 22-5-91 காலமானார்.

இவர் நடராசாவின் [காணி பதிவாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்] அன்பு மனைவியும், மனோரஞ்சித், மனோரமணன் ஆகியோரின் அன்புத் தாயும், திரு., திருமதி மனோரஞ்சிதன் அவர்களின் அன்பு மகளும், திரு. திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மருமகளும், பாரதாதேவி [ஆசிரியை], சுதாகரன் [சுவிஸ்], நரேந்திரன் [ஜேர்மனி], சிறீதரன் [நீதிபதி], சுபத்திராதேவி [விகிதர்], கலைவாணிதேவி, [கனடா], மனோகரன் [டென்மார்க்], லங்காதேவி [ஆசிரியை] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

2 ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில்.

சி. திருச்செல்வம்

[16748]

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு தங்கமுத்து

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசுவின் மனைவி தங்கமுத்து நேற்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கோவிந்தசாமி, காலஞ்சென்ற சிற்றம்பலம், இளைப்பாறிய விகிதர் குருசாமி, காலஞ்சென்ற மார்க்கண்டு, இளைப்பாறிய விளையாட்டு உத்தியோகத்தர் அரிச்சந்திரா, உருத்திரா, ரவீந்திரநாத் [பிரான்ஸ்], திருமதி சரஸ்வதி, திருமதி சு. மகாலட்சுமி, திருமதி கு இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், க. சண்முகம், பொ. சண்முகலிங்கம், கிளிநொச்சி குணம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் காலஞ்சென்ற செ குணரத்தினம், காலஞ்சென்ற அன்னலட்சுமி, சின்னம்மா, காலஞ்சென்ற நகுலேஸ்வரி, மாமகேஸ்வரி காலஞ்சென்ற கனகபூசனம், உ. ஞானாம்பிகை ர. கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 2 மணியளவில் சுழிபுரம் மேற்கில் உள்ள சண்முகலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் திருவடி நிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சுழிபுரம் மேற்கு

கார்த்திகேசு குருசாமி

[16951]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org